www.Padasalai.Net www.TrbTnpsc.com

# மூன்றாம் திருப்புதல் தேர்வு – 2025

## பத்தாம் வகுப்பு

நேரம்: 3.00 மணி **சமூக அறிவியல்** மதிப்பெண்கள்:100

பகுதி – அ

**I சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும். 14x1=14**

1. பன்னாட்டுச் சங்கத்தின் முதல் பொதுச் செயலாளர் எந்த நாட்டைச் சேர்ந்தவர்.
அ) பிரிட்டன் ஆ) பிரான்ஸ் இ) டச்சு ஈ) அமெரிக்க ஐக்கிய நாடுகள்
2. "நாம்தாரி" இயக்கத்தை உருவாக்கியவர் யார் ?
அ) பாபா தயாள்தாஸ் ஆ) பாபா ராம்சிங் இ) குருநானக் ஈ) ஜோதிபாபுலே
3. வேலூர் புரட்சிக்குப் பின் திப்பு சுல்தானின் மகன்கள் எங்கு அனுப்பப்பட்டார்கள்.
அ) கல்கத்தா ஆ) மும்பை இ) டெல்லி ஈ) மைசூர்
4. கூற்று : பிரிட்டிஷ் அரசு 1857–ஆம் ஆண்டின் பெரும் புரட்சியை இரும்புக்கரம் கொண்டு அடக்கியது.
காரணம் : மையப்படுத்தப்பட்ட நிர்வாகம் இல்லாததால் கிளர்ச்சி தோல்வி கண்டது.
அ) கூற்று மற்றும் காரணம் இரண்டுமே தவறு
ஆ) கூற்று தவறு காரணம் சரி
இ) கூற்று மற்றும் காரணம் இரண்டுமே சரி. அத்துடன் காரணம் கூற்றுக்கான சரியான விளக்கம் ஆகும்.
ஈ) கூற்று மற்றும் காரணம் இரண்டுமே சரி. ஆனால் காரணம் கூற்றுக்கான சரியான விளக்கம் இல்லை.
5. 1933 ஜனவரி 8 எந்த நாளாக அனுசரிக்கப்பட்டது.
அ) கோவில் நுழைவு நாள் ஆ) மீட்பு நாள் இ) நேரடி நடவடிக்கை நாள் ஈ) சுதந்திரப் பெருநாள்
6. இந்தி எதிர்ப்பு மாநாடு எங்கே நடத்தப் பெற்றது ?
அ) ஈரோடு ஆ) சென்னை இ) சேலம் ஈ) மதுரை
7. இந்தியாவின் வடக்கு தெற்கு பரவல்
அ) 2500 கி.மீ. ஆ) 2933 கி.மீ. இ) 3214 கி.மீ. ஈ) 2814 கி.மீ.
8. இந்தியாவின் முக்கிய இறக்குமதி பொருள்
அ) சிமெண்ட் ஆ) ஆபரணங்கள் இ) தேயிலை ஈ) பெட்ரோலியம்
9. தமிழ்நாட்டில் அதிக பரப்பளவில் மாங்குரோவ் காடுகளைக் கொண்ட மாவட்டம் எது ?
அ) இராமநாதபுரம் ஆ) நாகப்பட்டினம் இ) கடலூர் ஈ) தேனி
10. தென்னிந்தியாவின் நெற்களஞ்சியம் என்று அழைக்கப்படும் டெல்டா.
அ) காவிரி டெல்டா ஆ) மகாநதி டெல்டா இ) கோதாவரி டெல்டா ஈ) கிருஷ்ணா டெல்டா
11. இந்திய மாநிலங்களின் எல்லைகளை மாற்றியமைக்கும் அதிகாரம் பெற்றவர் / பெற்ற அமைப்பு
அ) குடியரசுத் தலைவர் ஆ) பிரதம அமைச்சர் இ) மாநில அரசாங்கம் ஈ) நாடாளுமன்றம்
12. கீழ்க்காணும் எந்த ஒன்று ஆளுநரின் அதிகாரமல்ல
அ) சட்டமன்றம் ஆ) நிர்வாகம் இ) நீதித்துறை ஈ) தூதரகம்
13. முதன்மை துறை இதனை உள்ளடக்கியது
அ) வேளாண்மை ஆ) தானியங்கிகள் இ) வர்த்தகம் ஈ) வங்கி
14. திருப்பூர் ____________ தொழிலுக்குப் பெயர் பெற்றது.
அ) தோல் பதனிடுதல் ஆ) பூட்டு தயாரித்தல்
இ) பின்னலாடை தயாரித்தல் ஈ) வேளாண் பதப்படுத்துதல்

பகுதி – ஆ

**II எவையேனும் 10 வினாக்களுக்கு விடையளி. (வினா எண் 28 கட்டாய வினா) 10x2=20**

15. "டாலர் ஏகாதிபத்தியம்" – தெளிவுபட விளக்குக.
16. முத்து துறைமுக நிகழ்வை விவரி.
17. இராமலிங்க அடிகளின் சீர்திருத்தங்கள் குறித்து சிறுகுறிப்பு வரைக.
18. லக்னோ ஒப்பந்தத்தின் முக்கிய அம்சங்களைத் தொகுத்து வழங்கவும்.
19. தங்களுடைய எழுத்துகளின் மூலம் தமிழ் இலக்கியத்தின் புத்துயிர்ப்புக்குப் பங்களிப்புச் செய்த ஆளுமைகளை பட்டியலிடவும்.

Knidly Send Me Question & Answer Keys to Us: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



20. இந்தியாவின் மேற்கு நோக்கி பாயும் ஆறுகளைப் பற்றி குறிப்பிடுக.
21. இந்தியாவில் உள்ள உயிர்க்கோள காப்பகங்கள் ஏதேனும் ஐந்தினை எழுதுக.
22. இயற்கை எரிவாயு என்றால் என்ன ?
23. தமிழ்நாட்டின் முக்கிய பல்நோக்குத் திட்டங்களின் பெயர்களை எழுதுக.
24. இந்திய குடியரசுத் தலைவர் எவ்வாறு தேர்ந்தெடுக்கபடுகிறார் ?
25. அணிசேரா இயக்கத்தின் நிறுவனத் தலைவர்கள் யாவர் ?
26. உலகமயமாக்கலின் நேர்மறையான தாக்கங்கள் இரண்டினை எழுதுக.
27. பண்டங்கள் மற்றும் பணிகள் வரி – சிறு குறிப்பு வரைக.
28. கலடன் பன்முக மாதிரி போக்குவரத்து திட்டம் என்றால் என்ன ?

பகுதி – இ 10x5=50

III ஏதேனும் 10 வினாக்களுக்கு விடையளி. (வினா எண் 42 கட்டாய வினா)

*கோடிட்ட இடங்களை நிரப்புக.*

29. i) __________ என்பது தொலைவிலிருந்தே எதிரிகளின் போர் விமானங்களைக் கண்டுபிடிப்பதற்கான ஒரு கருவி.
   ii) கிழக்குத் தொடர்ச்சி மலையின் தென்பகுதியில் உள்ள உயரமான சிகரம் __________ ஆகும்.
   iii) இறக்குமதி மற்றும் ஏற்றுமதி மதிப்புகளுக்கு இடையில் உள்ள வேறுபாடு __________ என அழைக்கப்படுகின்றது.
   iv) இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் பாதுகாவலன் __________ ஆகும்.
   v) இரு வல்லரசுகளின் பனிப்போரினை எதிர்கொள்ள இந்தியா பின்பற்றிய கொள்கை__________
30. முதல் உலகப்போருக்கான முக்கியக் காரணங்களை விவாதி.
31. வேலூரில் 1806–இல் வெடித்த புரட்சியின் கூறுகளை விளக்குக.
32. காந்தியடிகளை ஒரு மக்கள் தலைவராக உருமாற்றம் செய்ய உதவிய காரணிகள் யாவை ?
33. தென்மேற்கு பருவக் காற்று குறிப்பு வரைக.
34. இந்திய தொழிலகங்கள் எதிர் கொள்ளும் முக்கிய சவால்கள் பற்றி எழுதுக.
35. வேறுபடுத்துக. அ) காவிரி மற்றும் தாமிரபரணி ஆ) வானிலை மற்றும் காலநிலை
   காரணம் கூறுக. அ) மழைநீர் சேமிப்பு அவசியம்
36. நெல் மற்றும் கோதுமை பயிரிடுவதற்கு ஏற்ற புவியியல் சூழல்கள் பற்றி விவரி.
37. புயலுக்கு முன்னரும் பின்னரும் மேற்கொள்ள வேண்டிய அபாய நேர்வு குறைப்பு நடவடிக்கைகளை எழுதுக.
38. இந்திய அரசியலமைப்பின் சிறப்புக் கூறுகளை எழுதுக.
39. முதலமைச்சரின் அதிகாரங்கள் மற்றும் பணிகளை பற்றி விவரி.
40. GDP ஐ கணக்கிடும் முறைகள் யாவை ? அவைகளை விவரி.
41. கீழ்க்காண்பனவற்றிற்கு காலக்கோடு வரைக.
   1920 முதல் 1940 வரையிலான ஆண்டுகளுக்கு உட்பட்ட முக்கியமான நிகழ்வுகள் ஏதேனும் ஐந்தினை காலக்கோட்டில் வரைக.
42. **உலக வரைபடத்தில் பின்வரும் இடங்களை குறிக்கவும்**
   1) அட்லாண்டிக் பெருங்கடல் 2) ஹவாய் தீவு 3) துருக்கி 4) மாஸ்கோ 5) கொரியா

பகுதி – ஈ

IV **பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்கவும்.** 2x8=16

43. அ) கிழக்கிந்திய கம்பெனியாரை எதிர்த்து கட்டபொம்மன் நடத்திய வீரதீரப் போர்கள் பற்றி ஒரு கட்டுரை வரைக.

   *(அல்லது)*

   ஆ) தமிழ்நாட்டின் நீர் ஆதாரங்களைப் பற்றி எழுதுக.
44. அ) **கொடுக்கப்பட்டுள்ள இந்திய வரைபடத்தில் கீழ்க்காணும் இடங்களைக் குறிக்கவும்**
   1) எவரெஸ்ட் சிகரம் 2) குறைந்த அளவு மழை பெறும் பகுதி 3) தேயிலை விளையும் பகுதி
   4) லட்சத் தீவுகள் 5) வண்டல் மண் 6) மகாநதி 7) இந்திய மின்னியல் நகரம்
   8) மும்பையிலிருந்து சென்னைக்கு கடல்வழிப் பாதை

   *(அல்லது)*

   ஆ) **கொடுக்கப்பட்டுள்ள இந்திய வரைபடத்தில் கீழ்க்காணும் இடங்களைக் குறிக்கவும்**
   1) பாக்நீர் சந்தி 2) ஜான்சி 3) கட்ச் வளைகுடா
   4) சோட்டா நாக்பூர் பீடபூமி 5) மும்பை ஹை 6) ஜாலியன் வாலாபாக்
   7) சணல் விளையும் பகுதி 8) மேட்டூர் அணை

***/***

Knidly Send Me Question & Answer Keys to Us: padasalai.net@gmail.com